CC// 208/2017

PW-2

22.12.2021

Pappathi

<u>குவிமுச பிரிவு 311 வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு, அம்மனுவின் பேரில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு அதன் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

சம்பவத்திற்கு பிறகு காளிமுத்து என்பவர்தான் என்னை கடையநல்லூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்ந்தார். மருத்துவமனையில் தன்னை யார் எல்லாம் எதைக்கொண்டு தாக்கினார்கள் என்பதை பற்றி மருத்துவரிடம் நான்தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் புகார் மனுவை யார் வைத்து தயார் செய்து எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்று புகார்மனு கொடுத்தார் என்றால் மாலை 06.00 மணிக்கு வழக்கறிஞர் மூலம் சென்றார். சம்பவத்தின் போது 7 வது எதிரி என்னை அடிக்கும் போது மூக்குத்தியும், கம்மலும் காணாமல் போய்விட்டது, அதை யார் எடுத்து சென்றார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது, மேற்படி கம்மலும் மூக்குத்தியும் கிடைக்கவில்லை. என் கணவர் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் என் கணவர் புகார் மனுவில் என்ன எழுதி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையின் போது போலிசார் சொல்லிக்கொடுத்த படி நான் சாட்சியம் அளித்தேன் என்றால் புகாரில் உள்ள சம்பவங்களை நான் மயக்கம் தெளிந்த பின்பு என்னிடம் கேட்டார்கள். நான் பாதிக்கப்பட்டுள்ளதால் யாரும் சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கவில்லை, சம்பவ இடமானது என் வீட்டிற்கள் செல்லும் சந்து பகுதி என்றால் சரிதான். மேற்படி சந்துக்குள் தனியாக யாரும் செல்ல முடியாது, அது ஊருக்கு சம்பந்தமான பொது இடமாகும், அந்த இடத்தில் நாங்கள் மட்டும்தான் நடப்போம். என்னுடைய முதல் விசாரணையில் கடையநல்லூர் காவல் நிலையக்குற்ற எண் 352/2015 இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு

பெண்கள் வன்கொடுமை சட்டம் பிரிவு 4 ன் கீழ் புகார் மனுவில் பதிவு செய்யப்பட்டு மேற்படி புகாரில் எந்தவிதமான உண்மை தன்மை இல்லாமலும், சாட்சியங்களும் தடங்களும் இல்லாமல் காவல்துறை விசாரணை மேற்கொள்ளாமல் FIR நிலுயையில் உள்ளது என்றால் சரிதான், நான் சொன்னது போன்று எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, நான்தான் 2 வது எதிரி முத்தத்தாளை அடித்து கடித்து காயப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தேன் என்றால் பொய், மேற்படி சம்பவத்தினால் 2 வது எதிரி எனக்கு எதிராக கடையநல்லூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து விடுவரோ என பயந்து என்னுடைய கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி மருத்துவமனையில் பொய்யான காரணங்களை கூறி சிகிச்சைக்குசேர்ந்துள்ளேன் என்றால்சரியல்ல, எதிரிகள் யாரும் என்னை அசிங்கமாக பேசி, தாக்கி மிரட்டல் விடுக்கவில்லை, என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன் விரோதம் காரணமாகதான் காவல் துறை உதவியுடன் எதிரிகளுக்கு பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.